International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385 (Print)
Volume 6, Issue 4, October – December 2019 ISSN 2394-6393 (Online)

# டாக்டர் பூவண்ணன் சிறுவர் உலகிற்காக இயற்றிய புலவர்மகன்

ச.ராஜேஸ்வரி

*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி, சென்னை - 04*

**சுருக்கம்** — குழந்தை எழுத்தாளரான டாக்டர் பூவண்ணன் என்ற வே.தா.கோபாலகிருஷ்ணன் சிறுவர் உலகிற்காக நான்கு வரலாற்று நாவல்கள் இயற்றியுள்ளார். அதில் ஒன்று தான் 'புலவர்மகன்' என்ற நாவலாகும். மேலும் இவ்வரலாற்று நாவலுக்கு முன்பு பல சமூக நாவல்களை எழுதியுள்ளார். அவைகள் சிறுவர் உலகம் சார்ந்து இடம்பெற்றுள்ளதோடு சமூக மேம்பாட்டிற்கான படைப்புகளாக அமைந்துள்ளன. அந்தவகையில் புலவர்மகன் என்ற வரலாற்று நாவலின் மூலம் உணர்த்திய கருத்துகளைக் காணலாம்.

**சிறப்புச்சொல்** — வரலாற்று முக்கியத்துவம்; மதுரை; மன்னர்கள்

## 1. வரலாற்று நாவல்

பாண்டியன் முடத்திருமாறன் ஆட்சிக்காலத்தில் கடற்கோளின் தாக்கம் குமரிநாட்டின் தலைநகரான கபாடபுரம் மீது ஏற்பட்டதால், அதன் பெரும்பகுதியை தமிழகம் இழக்க நேர்ந்துள்ளது. அதன்பின்பு பாண்டியன் முடத்திருமாறன் தன் ஆட்சிக்காக ஒரு புதிய நகரை தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆட்சிசெய்ய ஆரம்பித்தார். அவ்வாறு இடம்பெற்ற தலைநகரம் தான் மதுரையாகும். இம்மாநகரம் வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள நகரமாகும். இன்று இந்நகரம் 147.99 ச.கி.மீ பரப்பளவு உடையது. இதில் வரலாற்று சிறப்பு வாய்ந்த நினைவிடங்கள் அமைந்துள்ளதைக் காணலாம். அவை,

- மீனாட்சியம்மன் கோயில்
- வைகை ஆறு
- தெப்பக்குளம்
- பெரியார் பேருந்து நிலையம்

போன்ற இடங்கள் இன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அமைந்துள்ளன. இத்தகைய வரலாற்று சிறப்பிடங்களைக் கொண்ட இந்நகரம் தென்னிந்திய திருத்தலங்களுக்கு நுழைவு வாயிலாக இடம்பெற்றுள்ளதோடு, தொன்மையான நகரமாக இடம் பெற்றள்ளது குறிப்பிடத்தகுந்தது. மேலும், தமிழ்நாட்டின் மூன்றாவது பெரிய நகரமாக மதுரை காட்சியளிக்கிறது.

சங்க காலத்தில் இந்நகரம் நான்மாடக் கூடல் என்று அழைக்கப்பட்டுள்ளதோடு, தமிழ்கெழு கூடல் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. அதற்குக்காரணம் இந்நகரத்தில் தமிழறிஞர்களால் மூன்றாம் தமிழ்ச் சங்கம் என்ற கடைச்சங்கம் நிறுவப்பட்டுள்ளது. அதன் மூலம் தமிழ் மொழி வளர்ந்த விதத்தையும் எடுத்துக்காட்டுகிறது. அதனால் தான் இன்று மதுரை தமிழ்மொழியின் பிறப்பிடமாக எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாமல் கல்விக்கான மைய இடங்களில் ஒன்றாகக் திகழ்வதோடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் உட்பட பல ஆராய்ச்சி நிறுவனங்கள் இருப்பதன் மூலம் அறியமுடிகிறது.

சங்க காலத்தில் மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்களில் ஒருவராகப் பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். இவருக்கு முன்பும் இவருக்கு பின்பும் இந்நகரை தலைநகரமாகக்


DOI: 10.30726/ijlca/v6.i4.2019.64001

கொண்டு ஆண்ட மன்னர்களின் பெயர் பட்டியலைக் கீழ்வருமாறு காணலாம்.

## 2. முன்பு

- பாண்டியன் முடத்திருமாறன்
- பாண்டியன் மதிவாணன்
- கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி
- பொற்கைப் பாண்டியன்
- கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
- பாண்டியன் அறிவுடை நம்பி
- ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
- பசும்பூண் பாண்டியன்
- அழகிய பாண்டியன்
- ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்
- வெற்றிவேற் செழியன் (சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்)

## 3. பின்பு

- பாண்டியன் கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதி
- வெள்ளியம் பலத்துத் துஞ்சிய மாறன்வழுதி
- மாலைமாறன்
- கூடகாரத்துத்துஞ்சிய மாறன் வழுதி
- குறுவழுதி
- பன்னாடுத்தந்த பாண்டியன் மாறன் வழுதி
- நம்பி நெடுஞ்செழியன்

போன்றோர் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு முன்பும் பின்பும் மதுரையை ஆண்டனர். மேலும் இவர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்தவர்கள். குறிப்பாகச் சங்ககாலத்தை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று வரலாற்று ஆசிரியர்கள் பகுத்துள்ளனர். அதில் கடைச் சங்க காலத்திற்கு முந்தி வாழ்ந்தவர்கள் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் முதல் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி வரை இடம்பெற்ற பாண்டிய மன்னர்கள் ஆவர். இவர்களை அடுத்து கடைச் சங்க காலத்தில் வாழ்ந்தவர்கள் பாண்டியன் முடத்திருமாறன் முதல் நம்பி நெடுஞ்செழியன் வரை இடம்பெற்ற பாண்டிய மன்னர்கள் ஆவர். அதனால் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ் செழியனை கடைச் சங்க காலத்தில் வாழ்ந்த மன்னர் என்பர். மேலும், இச்சங்க காலம் உட்பட பல்வேறு காலகட்டத்தில் மதுரையை ஆண்டவர்கள்,

- சங்ககாலப் பாண்டியர்கள்
- இடைக்காலச் சோழர்கள்
- பிற்காலச் சோழர்கள்
- பிற்காலப் பாண்டியர்கள்
- மதுரை சுல்தானகம்
- விஜய நகரப் பேரரசு
- மதுரை நாயக்கர்கள்
- கர்நாடக இராட்சியம்
- ஆங்கிலேயர்கள்

போன்றோர் இந்நகரை ஆண்டுள்ளதோடு, ஆட்சியும் செய்துள்ளனர். இதில் மிகவும் சிறப்பு வாய்ந்தவர் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவார். ஏனென்றால் இவர் தன் இளம்வயதிலேயே பாண்டிய நாட்டின் பேரரசனானதோடு, தலையாலங்கானம் என்னுமிடத்தில் நிகழ்ந்த பெரும் போரில் ஏழு அரசர்களையும் வென்ற இளைஞராகவும் புகழ்பெற்றவர் இப்பாண்டிய மன்னர், அதனால் இவரை புகழ்ந்துப் பாடிய புலவரையும் முன்னிட்டு டாக்டர் பூவண்ணன் இயற்றிய வரலாற்று நாவலே புலவர்மகன் என்ற நாவலாகும்.

இந்நாவல் சிறப்புக்குரிய சிறுவர் வரலாற்று நாவலாக இடம்பெற்றுள்ளதோடு, சிறுவர் உலகின் மேம்பாட்டிற்குரிய நாவலாக இடம்பெற்றுள்ளது. இதில் இடம்பெற்ற வரலாற்று கதைமாந்தர்கள் முதல் நிகழ்விடங்கள் வரை அனைத்துமே சங்ககாலத்தை பிரதிபலிப்பதோடு, அக்கால மக்களின் வாழ்க்கைச் சூழலையும் காட்சிப்படுத்தும் நாவலாகவும் இந்நாவல் காணப்படுகிறது.


DOI: 10.30726/ijlca/v6.i4.2019.64001

சான்றாக, இன்று மதுரை மாநகரத்தை மல்லிகை மாநகரம், சிவநகரம், மதுரை என்று அழைக்கிறோம், சங்ககாலத்தில் இந்நகரம் மதுரை, கூடல் என்று அழைக்கப்பட்டுள்ளதோடு, நான் மாடக் கூடல், திரு ஆலவாய், கடம்பவன் என்று பலபெயர்களிலும் அழைக்கப்பட்டுள்ளன. மேலும் இம்மதுரை மாநகரம் வரலாற்று நிகழ்விடமாக இடம்பெற்றுள்ளதோடு இந்நாவலுக்கான களமாகவும் (இடமாகவும்) இடம் பெற்றுள்ளது. இவற்றோடு இந்நாவலில் இடம்பெற்ற

- பாண்டியன் நெடுஞ்செழியன்
  (தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்)
- நன்மாறன்
- குடபுலவியனார்
- சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை
- பாண்டியன் முடத்திருமாறன்
- கணக்காயர் கடலனார்
- குறுங்கோழியூர் கிழார்
- பெருந்தோளார்
- புலவர் மாங்குடி மருதனார்
- இடைக்குன்னூர் கிழார்
- சோழன் பெருநற்கிள்ளி
- திதியன், எழியன், பொருநன், எருமையூரான், இளங்கோ

போன்றோர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த வரலாற்றுக் கதைமாந்தர்கள். இவர்களை தன் படைப்பின் மூலம் படைத்து நாவலாக வெளியிட்டுள்ளார் பூவண்ணன். இவர்கள் இக்கதைக்கானக் காட்சிகளாக இடம் பெற்றுள்ளதோடு, கதைக்குரிய வரலாற்றுக் கதைமாந்தர் களாகவும் இடம்பெற்றுள்ளனர்.

## 4. நிறைவாக

இந்நாவலே பூவண்ணனின் முதல் வரலாற்று நாவல் என்று சிறுவர் உலகில் இடம்பெறுவதோடு, சிறுவர் உலகிற்காக வரலாற்று நாவலை முதலில் எழுதியவர் என்ற சிறப்பையும் பெற்றவராகத் திகழ்வதைக் காணலாம்.

இந்நாவலை 1964 இல் பாரிநிலைய வெளியீடாக வெளிவந்துள்ளது.

## துணைநின்றவை

[1] ம.இராசசேகர தங்கமணி (ப.ஆ), பாண்டியர் வரலாறு (முதல் பாகம்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1978.

[2] டாக்டர் பூவண்ணன், டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் (தொகுதி - பதினொன்று), புலவர்மகன் (வரலாற்று நாவல்), பூவண்ணன் பதிப்பகம், கோவை, 2001.


DOI: 10.30726/ijlca/v6.i4.2019.64001